# මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
# நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
# MINISTRY OF FINANCE AND MASS MEDIA

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office - මුදල් / நிதி / Finance: (+94)-11-2484500, (+94)-11-2484600, (+94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax - මුදල් / நிதி / Finance: (+94)-11-2449823
කාර්යාලය / அலுவலகம் / Office - ජනමාධ්‍ය / வெகுசன ஊடக / Mass Media: (+94)-11-2513459, (+94)-11-2513498, (+94)-11-2512324
ෆැක්ස් / பெக்ஸ் / Fax - ජනමාධ්‍ය / வெகுசன ஊடக / Mass Media: (+94)-11-2513458
වෙබ් අඩවි / வெப் சைட்கள் / Websites: www.treasury.gov.lk, www.media.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: எம்எஸ்டி/ சுற்றறிக்கை / 2017
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2017.10.25

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 05/2017

அமைச்சின் செயலாளர்கள்,
அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டமுறைச் சபைகள் மற்றும்
முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகளின் தலைவர்கள் யாவருக்கும்.

**<u>அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டமுறைச் சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகளிலுள்ள சிரேட்ட மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு தொழில்சார் கொடுப்பனவொன்றை வழங்குதல்</u>**

அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட முறைச் சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகளில் உள்ள சிரேட்ட மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்காக 2017.08.15 ஆம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது, பின்வரும் (02) பந்தியிலுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு தொழில்சார் கொடுப்பனவொன்றை 2017.10.01 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் விதமாக செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

01. செலுத்தவேண்டிய மாதாந்த தொழில்சார் கொடுப்பனவு

| வகுதி | மாதாந்த கொடுப்பனவு (ரூபா) |
|---|---|
| 06 வருடங்களுக்கு குறைவான திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்ட உத்தியோகத்தர்கள் | ரூபா 3000 |
| 06 வருடங்கள் அல்லது அதற்கு கூடுதலான மற்றும் 11 வருடங்களுக்கு குறைவான திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்ட உத்தியோகத்தர்கள் | ரூபா 5000 |
| 11 வருடங்கள் அல்லது அதற்குக் கூடுதலான மற்றும் 19 வருடங்களுக்கு குறைவான திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்ட உத்தியோகத்தர்கள் | ரூபா 10,000 |
| 19 வருடங்கள் அல்லது அதற்குக் கூடுதலாக திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்ட உத்தியோகத்தர்கள் | ரூபா 15,000 |

02. மேற்குறிப்பிட்ட கொடுப்பனவுகளை செலுத்துவதற்குரிய நிபந்தனைகள்

I. இந்தக் கொடுப்பனவானது, 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் அட்டவணை III இல் காட்டப்பட்டுள்ள சேவை வகைப்படுத்தல்களில் சிரேட்ட மட்டத்திற்கு உரித்தான பதவிகளுக்காக மாத்திரம் ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல் வேண்டும்

II. இந்தக் கொடுப்பனவை 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் கீழ் சம்பளம் வழங்கப்படுகின்ற நிறுவனங்களுக்குரிய பதவியினர்களுக்காக மாத்திரம் செலுத்தப்படுதல் வேண்டும்.

III. இந்த கொடுப்பனவுக்காக மேற்குரிப்பிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள விதமாக, தற்போது பெறுகின்ற சம்பளத்திற்கு மேலதிகமாக செலுத்தப்படுகின்ற சீராக்கக் கொடுப்பனவு மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக மொழித் தேர்ச்சிக் கொடுப்பனவு, போக்குவரத்து கொடுப்பனவு, அபாயக் கொடுப்பனவு மற்றும் தொலைபேசிக் கொடுப்பனவு தவிர்ந்த ஏனைய எந்தவொரு விசேட கொடுப்பனவையும் பெறாத உத்தியோகத்தர்கள் மாத்திரமே உரிமை பெறுகின்றனர்.

IV. சிரேட்ட மட்டத்திலுள்ள சேவைக் காலத்தைக் கணக்கிடும் போது, உத்தியோகத்தர் அந்த நிறுவனத்தில் சிரேட்ட மட்டத்திலுள்ள பதவியொன்றில் சேவை செய்துள்ள திருப்திகரமான சேவைக் காலத்தை மாத்திரம் ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

**ஒப்பம்/ ஆர்.எச்.எஸ். சமரதுங்க**
திறைசேரியின் செயலாளர் மற்றும்
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர்

பிரதிகள்

1- சனாதிபதியின் செயலாளர்
2- பிரதமரின் செயலாளர்
3- அமைச்சரவையின் செயலாளர்
4- கணக்காய்வாளர் அதிபதி
5- செயலாளர், தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழு